# சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற இட நெருக்கடியை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு




**அறிக்கையின் இலக்கம்: ஜேஎல்ஓ/சீ/டீ/டீஈபீ/2022/19**

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

## உள்ளடக்கம்


| தொடர் இல. | | விபரம் | பக்க இல. |
|---|---|---|---|
| **01** | | **நிறைவேற்றுப் பொழிப்பு** | 01 |
| **02** | | **அறிமுகம்** | 04 |
| | 2.1 | பின்புலம் | 04 |
| | 2.2 | கணக்காய்விற்கான அதிகார பலம் | 08 |
| | 2.3 | கணக்காய்வு அணுகுமுறை | 08 |
| | 2.4 | கணக்காய்வின் நோக்கம் மற்றும் அளவுகோல்கள் | 09 |
| | 2.5 | கணக்காய்வு முறை | 11 |
| | 2.6 | கணக்காய்வின் பரப்பு மற்றும் விடயப் பரப்பெல்லை | 12 |
| **03** | | **விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள்** | 14 |
| | 3.1 | சிறைச்சாலைகளின் இயலளவு | 14 |
| | 3.2 | சிறைச்சாலைகளில் இட நெருக்கடி ஏற்படுவதற்கான காரணம் | 20 |
| | 3.3 | சிறைச்சாலைகளில் இட நெருக்கடியால் ஏற்படும் பிரச்சினைகள் | 27 |
| | 3.4 | சிறைச்சாலைகளில் இட நெருக்கடியை குறைப்பதற்காக அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 37 |
| **04** | | **பரிந்துரை** | 43 |
| | | பட்டோலை | 45 |

## 01 நிறைவேற்றுப் பொழிப்பு

சிறைச்சாலையின் வடிவம் தொடர்பாக இங்கிலாந்தின் ஜோன் ஹோர்வாட் (John Horward) இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் சிறைச்சாலைகளின் சுத்தம், இட வசதிகளுடன், கல்வி ரீதியான மற்றும் சமய கற்பித்தல்கள் மேகொள்ள வேண்டியிருந்ததுடன் உரிய நபர் விலகிச் சென்றதன் பின்னர் அவர் தொடர்பாக கண்டறிய வேண்டிய நிறுவனமாக இனங்காணப்பட்டிருந்தது. கைதி ஒருவர் குற்றம் இழைத்தவராக இருக்கும் போது அவர் உடலியல் மற்றும் மனரீதியான அழுத்தங்களுக்கு உட்படுத்தி தவறுக்கான தண்டனை வழங்க வேண்டியது என்ற நோக்கம் மற்றும் தவறின் அளவில் பாதிப்பு ஏற்படக்கூடியது என்ற எண்ணக்கரு கடந்த காலத்தில் சிறைச்சாலை முறைமையில் காணப்பட்டது. இந்த எண்ணக்கரு முன்னாள் இருந்த ஆய்வாளர்கள் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளின் கடுமையான விமர்சனத்திற்கு உட்பட்டிருந்தது. இந்த விடயத்தை அடிப்படையாக கொண்டு சிறைச்சாலை நோவினை கொடுக்க வேண்டியில்லாது இருந்ததுடன் அது சமூக சீர்திருத்தகமாக இருக்க வேண்டிய எண்ணம் மேல்லோங்கியிருந்தது. இதன் காரணமாக தண்டனை வடிவத்தில் காணப்பட்ட சிறைச்சாலையின் வரலாறு சீர்திருத்தமாக உட்பட்டு சீர்திருத்த கொள்கையொன்று முதன்மையாக கொண்டு கைதிகளை நிர்வகித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையின் சிறைச்சாலை வரலாற்றை கவனத்தில் கொள்ளும் போது கடந்த காலத்தில் முறையான சிறைச்சாலையொன்று காணப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. பிரித்தானிய ஆட்சிக் காலத்தின் போது முறையாக சிறைச்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 1832 ஆம் ஆண்டின் போது கெமரன் ஆளுனரால் அறிமுகப்படுத்தப்பட்ட நீதிமன்ற மறுசீரமைப்பின் விளைவாக 1844 இன் 18 ஆம் இலக்க சட்டங்கள், நீதி மன்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிரித்தானிய பொஸ்டல் முறைமைக்கு ஒத்ததாக வெலிக்கடை சிறைச்சாலை கட்டியெழுப்பட்டிருந்தது. கைதிகளை அடைத்து வைத்தல், அவர்களிடமிருந்து ஊழியங்களை பெறல் சிறைச்சாலை மூலம் ஆரம்பத்தின் போது எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பின்னர் 1877 இன் 16 ஆம் இலக்க சிறைச்சாலைகள் சட்டத்தின் பிரகாரம் 1905 யூலை 16 ஆம் திகதி சிறைச்சாலை திணைக்களம் உருவாக்கப்பட்டது. இதனிடையே வெளிப்படுத்தப்பட்ட சிறைச்சாலை திணைக்களம் இன்று வரையிலும் நாடு முழுவதும் 04 பாதுகாப்பு சிறைச்சாலைகள், 18 அடைத்து வைக்கும் சிறைச்சாலைகள், 02 இளைஞர் தவறு இழைத்தவரின் சீர்திருத்த நிலையங்கள், 10 வேலை முகாம்கள், 02 திறந்த வேலை முகாம்கள், 23 சிறை மேடைகள், சிறைச்சாலை பாடசாலைகளும் ஆக வியாபித்திருந்தது. தற்போது சமூக சிக்கல்களுக்கிடையே சிறைச்சாலை முறைமை விசேடமான தேவையாக உள்ள நிறுவனமாக உட்பட்டிருந்தது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு இணங்க மற்றும் தேசிய சட்ட முறைமைகள், பிரமாணங்கள் அல்லது ஏனைய வழிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு நியமங்களுக்கு இணங்க உளரீதியான மற்றும் உடல்ரீதியான அருகதைக்கு ஈடுகொடுக்கும் வகையில் இடவசதிகளுடன் ஏதாவது சிறைச்சாலையில் அடைத்து வைக்கக் கூடிய கைதிகளின் அளவு சிறைச்சாலையின் இயலளவு ஆகும். 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிறைச்சாலையின் இயலளவில் இருக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 11,291 ஆக இருந்த போதும் சிறைச்சாலை பாதுகாப்பின் கீழ் 16,727 சந்தேக நபர்களும், 9,449 கைதிகளும் ஆக 26,176 கைதிகளின் அளவில் இருந்தனர். இதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிறைச்சாலையின் இயலளவை விஞ்சியிருந்த கைதிகளின் சதவீதம் 232 ஆகும். பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது சிறை மேடைகள் மற்றும் வாட்டுக்களில் சிறைச்சாலை இயலளவை விஞ்சிய கைதிகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்ததுடன் ஏழாவது பணியாக சிறைச்சாலை மறுசீரமைப்பபை அமுல்படுத்துவதற்குரிய சிறைச்சாலை கூட்டநெரிசலை குறைப்பதற்காக நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், பௌதீக வளங்களை விருத்தி செய்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பன காண்பிக்கப்பட்ட போதும், தற்போது சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற கூட்ட நெரிசல் சிறைச்சாலை முறைமையினை முகாமைத்துவம் செய்யும் போது பிரதான பிரச்சினையாக எழுந்திருந்தது. இந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கும் நோக்கமாக இலங்கையில் சிறைச்சாலை

முறைமைகளில் காணப்படுகின்ற கூட்ட நெரிசல் மற்றும் அதற்கான காரணங்சகளை இணங்கானல், அந்த காரணங்களினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அதற்காக தேவையான பரிந்துரைகளை வழங்குதலும் ஆகும்.

சிறைச்சாலை கூட்ட நெரிசல் ஏற்படுவதற்கு தாக்கமளித்த பிரச்சினைகளாக கைதிகளை பராமரிப்பதற்காக அரசாங்கம் கனிசமான கிரயமொன்றை செய்தல், (2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 8.3 பில்லியன் தொகை) கைதிகளின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள், சுகாதார வசதிகளில் பிரச்சினைகள், சந்தேக நபர்களான கைதிகளின் ஊழிய பங்களிப்பை நாட்டின் பொருளாதாரத்திற்கு ஈடுபடுத்த முடியாமை, கைதிகளுக்கு புனர்வாழ்வளித்தல் தொடர்பான பிரச்சினைகள், கைதிகள் மீண்டும் மீண்டும் சிறைக்கு வருகின்றமை, சிறிய தவறுகளுக்காக சமூக சீர்திருத்த கட்டளைகள் வழங்கும் அளவு குறைவடைந்தமை, சமூக சீர்திருத்த கட்டளைகள் மீறுதல் அதிகரித்தமை, வீட்டுடன் விடுமுறை வழங்கும் முறைமை, மற்றும் அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் விடுவிக்கும் முறைமையை வெற்றிகரமாக அமுல்படுத்தாமை, சிறைச்சாலை இட நெருக்கடியை குறைப்பதற்காக அண்மைக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்பார்த்த மட்டத்தில் நிறைவேற்றப்படாமை. 2022 திசெம்பர் 31 உள்ளவாறு ஒட்டு மொத்த கைதிகளில் 53 சதவீதம் போதைப் பொருள்சார்ந்த தவறுகளினால் சிறைச்சாலைகளில் இடப்பட்டமை, பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமையினால் சிறையில் இருக்கின்றமை, இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையை காலரீதியில் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை, சமூக சீர்திருத்த கட்டளை தொடர்பாக பொது மக்களுக்கு அறிந்திருக்கும் அளவு போதியளவு இல்லாமை, காணப்படுகின்ற கட்டிடங்கள் உடைந்த நிலையில் காணப்பட்டமை, சந்தேக நபர்கள் நீண்ட காலம் தடுப்பு சிறைச்சாலைகளில் இருந்தமை, கைதிகள் அதிக அளவில் வயது 30 – 40 வருடங்களுக்கு இடையிலாக இருந்தமை, புனர்வாழ்வளிப்பதற்காக பௌதீக மற்றும் மனித வளங்கள் பற்றாக்குறை, கைதிகள் தனியார் பிரிவுகளில் சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை போதியளவில் நிறைவேற்றப்படாமை, கைதிகள் முழுமையாக வகைப்படுத்தப்படாமல் அடைத்து வைக்கபட்டமை என்பவற்றை அவதானிப்புகளாக காண்பிக்க முடியும்.

இந்த அறிக்கையின் மூலம் சிறைச்சாலை இட நெருக்கடியை போதியளவான பிரகாரம் குறைக்கும் நோக்கின் பரிந்துரையாக 1877 இன் 16 இலக்க சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ஆவது அதிகாரத்தில் உரியதாக மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் 178 மற்றும் 179 ஆம் அத்தியாயங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல், மீண்டும் மீண்டும் சிறைக்கு வருவதை குறைப்பதற்காக வலுவான மற்றும் போதியளவான புனர்வாழ்வளித்தல் செயற்பாடுகளை ஏற்படுத்துதல், வாழ்வாதார பயிற்சிகளை வலுப்படுத்துதல். முன்னைய வழக்கு விசாரணைகளில் நிறுத்தி வைத்த குற்றங்களை சமர்ப்பித்தலில் தாமதங்களை குறைத்தல். குறைப்பதற்கு உரிய தரப்பினர் முன்வருதல், தடுத்து வைத்தல் சிறைச்சாலைகளில் ஈடுபடுவதற்காக வீட்டில் தடுத்து வைத்தல் போன்ற மாற்றுவழி ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையை இலங்கை குற்றவியல் முறைமையில் அறிமுகப்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுத்தல், 2022 இன் 41 ஆம் இலக்க நச்சு வகை, மற்றும் அபாயகரமான ஔடத வகை திருத்தச் சட்டத்தின் 54 ஆவது பிரிவின் படி நீதிமன்றத்தின் மூலம் சிறைச்சாலைகளுக்கு கொண்டுவரப்படுகின்ற சந்தேக நபர்கள் உரிய பொலிஸ் திணைக்களத்தால் இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற தெரிவுகளுக்குரிய (sample) இரசாயன பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றங்களுக்கு தாமதமாக சமர்ப்பித்தல், குற்றம் இழைத்த மூலங்கள் காணப்படுகின்ற நிறுவனமாக இருந்ததுடன் ஒத்துழைப்பு பொறி முறையினை விருத்தி செய்தல். மற்றும் இயலுமான நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல், சிறைச்சாலை இட நெருக்கடி மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக சிறைச்சாலை நிருவாகிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல், மற்றும் செயற்திறனான மேற்பார்வையொன்றை பேணிச் செல்லல், தங்கி இருப்பவர்களின் தங்குமிடம் மற்றும் பாதுகாப்பிற்காக சர்வதேச மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இணங்க கைதிகளை சிறைச்சாலைகளுக்கு இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். சிறைச்சாலை முகாமைத்துவத்திற்கு இலகுவான வகையில் சமூக பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் போதைப்பொருள் தவறுகள், குற்றங்கள் மற்றும் தொடர்புடைய சட்டங்களை திருத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல், புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான

மனித மற்றும் பௌதீக வளங்களை போதியளவில் ஈடுபடுத்துதல், மற்றும் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல், தற்காலிக அமுல்ப்படுத்தல்களில் கைவிடப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலை தொகுதியை பொருத்தமான பிரதேசத்தில் ஸ்தாபித்தல், சிறைச்சாலை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் தற்போது வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தலை துரிதப்படுத்துதல், சிறைச்சாலைகளில் உடைந்து காணப்படுகின்ற கழிவறைக் கூடங்கள் மற்றும் பாதுகாப்பு குறைவான கட்டிடங்களை மறுசீரமைப்பு செய்தல். அல்லது புதிய கட்டிடங்களை நிர்மாணித்து கைதிகளின் தேவைகளை நிறைவேற்றுதல், கைதிகளின் ஊழியம் மற்றும் அறிவினை சமூக மயப்படுத்தி ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதை மேம்படுத்துதல், சிறைச்சாலை தங்குமிடத்தில் இட நெருக்கடியை குறைத்தலை முறையாக புனரமைப்பு நடவடிக்கைகளின் மூலம் தங்குபவர்களை நல்ல பிரஜையாக சமூகத்திற்கு வழங்குதல் என்பன பரிந்துரை செய்யப்பட்டது.

## 2. அறிமுகம்

### 2.1. பின்புலம்

சிறைச்சாலைகள் திணைக்களம், நீதிமன்றம், சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படும் ஒன்றாகும்.

#### 2.1.1. சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செயற்பாடுகள் தூர நோக்குகள், நோக்கம் மற்றும் பிரதான பணிகள்.

(அ) **பணிக்கூற்று**

பாதுகாப்பு, பராமரிப்பு, புனர்வாழ்வு ஆகிய முக்கிய இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சிறைக் கைதிகள் மற்றும் சிறைச்சாலை அலுவலர்களுக்கிடையே சிறந்த தொடர்பொன்றை ஏற்படுத்தி நேர்க் கணிய சிந்தனையைக் கட்டியெழுப்பி அலுவலர்களின் தொழில் திருப்தியை அதிகரிப்பதன் ஊடாகவும் மற்றும் சிறைக் கைதிகளின் நலன்புரி அலுவல்களை விதிமுறைப்படுத்துவதன் ஊடாகவும் அவர்களின் உழைப்பை நாட்டின் அபிவிருத்திக்குப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துதல்.

(i) **கைதிகளின் பாதுகாப்பு:-** நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல் குறித்துரைத்த சிறை தண்டனையை அமுல்படுத்துதல், பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல்,

(ii) **கைதிகளின் பராமரிப்பு:-** குறித்துரைத்த போசனையுள்ள உணவுகளை வழங்குதல், சுகாதார வசதிகளை வழங்குதல், கழிவறை வசதிகளை வழங்குதல்,

(iii) **புனர்வாழ்வு:-** தொழில்ரீதியான திறன்களில் ஈடுபடுத்துதல், (விவசாய ரீதியான/ கால்நடை வளர்ப்பு/ கைத்தொழில்), தொழிற் பயிற்சி பாடநெறிக்காக பங்குபற்றச் செய்தல், முறையான மற்றும் முறையற்ற கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபற்றச் செய்தல். கலாசார மற்றும் சமய விடயங்களுக்கு அனுப்புதல், விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்.

**(ஆ) தொலை நோக்கு**

சிறைக் கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்தல்.

**(இ) நோக்கங்கள்**

(i) சிறைக் கைதிகளை முறையாகப் புனர்வாழ்வழிப்பதன் மூலம் சட்டத்தை மதிக்கும் மனித நேயமுடைய நபர்களாக மாற்றி சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்தல்.

(ii) சிறைச்சாலை அலுவலர்களை ஊக்குவித்தல் மற்றும் திணைக்களக் குழு உணர்வைக் கட்டியெழுப்புதல்.

**(ஈ) பிரதான பணிகள்**

(i.) நாட்டினுள் ஏதேனும் நீதிமன்றமொன்றின் கீழ் சிறைபடுத்தப்படுகின்ற அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்ட சகல தராதரங்களையும் கொண்ட கைதிகளை பொறுப்பேற்று சிறைச்சாலைத் சட்ட திட்டங்களுக்கு இசைவானதாக அவர்களின் பாதுகாப்பு பராமரிப்பு ஆகியவற்றை வழங்குதல் மற்றும் நீதி மன்றங்களுக்கு வியக்கமறியல் கைதிகளை ஆஜர்படுத்தல்.

(ii.) அனைத்து சிறைச்சாலைகளின் சிறைக் கூடங்கள் மற்றும் நன்னடத்தை சீர்திருத்த நிலையங்கள் தொடர்பான பொதுவான ஏற்பாடுகள் மற்றும் சிறப்பான நிருவாகத்தை வழங்குதல்.

(iii.) அனைத்து சிறைச்சாலைகளின் சிறைக் கூடங்கள் மற்றும் நன்நடத்தை சீர்திருத்த நிலையங்களின் கைதிகளுக்கு தொழில்நுட்ப, விவசாய, விலங்குப் பராமரிப்பு மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குதல்.

(iv.) அனைத்து சிறைச்சாலைகளின் சிறைக் கூடங்கள் மற்றும் நன்நடத்தை சீர்திருத்த நிலையங்களிற்கான நலனோம்பல் வசதிகளை வழங்குதல்.

(v.) சீர்திருத்த துறையை வலுப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை தயாரித்தல்.

(vi.) காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் சிறைக் கைதிகளுக்குப் புனர்வாழ்வளித்து சிறந்த பிரசைகளாக வெளியேற்றுவதற்குத் தேவையான சமூகப் பின்னணியை உருவாக்குதல்

(vii.) சிறைச்சாலைகளின் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் போது ஏற்படக் கூடிய சிறைச்சாலை இட நெருக்கடியை குறைத்தல், புதிய தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தல், பௌதீக வளங்களை மேம்படுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை விருத்தி செய்தல்.

(viii.) வேை பிரிவிற்குரிய பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதனூடாக சிறந்த மாற்றத்தையும் மற்றும் சேவைத் திருப்தியையும் கொண்ட அலுவலர்களை உருவாக்குவதற்காகச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மனித வளங்களை விருத்தி செய்தல்.

(ix.) சிறைக் கைதிகள் நிருவாக அலுவல்களை மிகவும் முறையாகவும் மற்றும் வினைத்திறன் கொண்டதாகவும் ஆற்றிக் கொள்வதற்காகச் சிறைக் கைதிகளின் தகவல் முகாமைத்துவத் முறைமையைத் தாபித்து அதனை நடைமுறைப்படுத்துதல்.

### 2.1.2. சிறைச்சாலை திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்.

| | நிறுவனம் / பிரதான நிலையத்தின் பெயர் | உரிய நிறுவனம் / நிலையத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள் |
|---|---|---|
| (i.) | சிறைச்சாலைகள் தலைமையகம் | சிறைச்சாலைகள் தலைமையகத்தின் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையம் |
| (ii.) | பாதுகாப்பு சிறைச்சாலை | வெலிக்கடை, போகம்பற, மகர, அங்குணகொலபெலஸ்ஸ, பூஸ்ஸ |
| (iii.) | தடுத்து வைத்தல் சிறைச்சாலை | அநுராதபுரம், கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு, காலி, புதிய மெகசீன், பதுளை, மாத்தறை, மட்டக்களப்பு, கேகாலை, திருகோணமலை, யாழ்ப்பாணம், குருவிட்ட, மொனராகலை, வாரியபொல, வவுனியா. |
| (iv.) | வேலை முகாம்கள் | ஹோமாகம, மீதிரிகல, வீரவில, குருவிட்ட, வாரியபொல, ஹங்கிலிபொல, கந்தேவத்த, கதுறுகஸ்ஆர, பிட்டபெத்தர, அம்பேபுஸ்ஸ |
| (v.) | திறந்த வெளி சிறை முகாம்கள் | பல்லேகல, அநுராதபுரம் |
| (vi.) | இளைஞர் தவறு இழைத்தவர்களின் சீர்திருத்த நிலையம். | பல்லன்சேன, தல்தென |
| (vii.) | சிறைக் கூடம் | அம்பாறை, அவிசாவலை, பலாங்கொடை, சிலாபம், எல்பிட்டி, எம்பிலிபிட்டி, கம்பஹா, கம்பளை, அம்பாந்தோட்டை, ஹற்றன், கல்முனை கிளிநொச்சி, குளியாபிட்டி, குருநாகல், மாகோ, மன்னார், மாத்தளை, முல்லைத்தீவு, நுவரெலியா, பாணந்துறை, பருத்தித்துறை, புத்தளம். |

### 2.1.3. விளக்கம்

சிறைச்சாலையின் அர்த்தம் கொள்ளப்படுகின்ற முறையில் ஒவ்வொரு நிறுவனங்களிலும் விளக்கம் காண்பிக்கப்பட்டுள்ள முறை பின்வருமாறு.

**(அ) சிறைச்சாலைகள் :-**

வயது வந்த கைதிகளை நிறுத்தி வைக்கும் இடமாகும். பாதுகாப்பதற்காக சிறைச்சாலைகளை சுற்றி மதில் அமைக்கப்பட்டுள்ளது. அதிக பாதுகாக்கப்பட்ட அமைப்புக்கள் மற்றும் பாதுகாப்பு சிறைக் கூடங்கள் உள்ளது. தண்டனை பெற்ற, தண்டனை பெறாத முறைப்பாடுகள் போன்ற சகல வகையான கைதிகளும் உள்ளனர். தடுத்து வைக்கும் காலம் வரையறுக்கப்படவில்லை. தண்டனை பெற்றவர்களின் சீருடை ஜம்பர் மற்றும் காற்சட்டை ஆகும். வயது

வந்தோர் கல்வி முறைமையொன்று உள்ளது. சிறைச்சாலையில் ஆகக் கூடியது 05 வருடங்கள் வரை சிறை தண்டணை அனுபவிக்க வேண்டும். தண்டணை பெற்ற கைதிகள் சிறைச்சாலைகளில் உள்ளடக்கப்படுவது தண்டணைக்காக ஆகும். அவர்களுக்கு அரசாங்கத்தின் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ளும் உரிமை இழக்கப்படுகின்றது. கைதிகளுக்காக கையளிக்கப்படுகின்ற சிறை மன்னிப்பு உரித்தாகும்.

**(ஆ) பாதுகாப்பு சிறைச்சாலை :-**

மதில்களால் சூழப்பட்டுள்ளது. சந்தேக நபர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக நீதிமன்ற நடவடிக்கைகள் காணப்படுகின்றது. சிறிய அளவில் தொழிற் பயிற்சி, புனரமைப்பு / ஆலோசனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளது. உள்ளக சேவைக்காக குறுகிய காலம் கைதிகள் ஈடுபடுத்தப்படுகின்றன.

**(இ) திறந்த வெளி சிறை முகாம்கள்** :-

இதில் தண்டணை பெறுகின்ற ¼ பங்கு செலுத்திய மற்றும் மிகுதி 05 வருடங்கள் செலுத்தாத கைதிகளுக்காக மாத்திரம் ஆகும். மதில் இல்லை. சுதந்திர தரப்பினர் சுதந்திரமாக உள்ளனர். விவசாய மற்றும் கால்நடை வள நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றனர். திறந்த வெளியில் உள்ளவர்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

**(ஈ) வேலை முகாம்:-**

விடுவிப்பதற்கு 05 வருடங்களுக்கு குறைந்த கைதிகள் நிறுத்தி வைக்கப்படுகின்றனர். கைதிகளுக்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடங்கள் இல்லை. சுதந்திர தரப்பினர், விவசாய மற்றும் கால்நடை நிர்வாகத்திற்காக ஈடுபடுத்தப்படுகின்றனர். வெளியில் உள்ளவர்களை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது. புனரமைப்பு / ஆலோசனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளது. ஆகக் குறைந்த பாதுகாப்பு உள்ளது. இதில் நீதிமன்ற நடவடிக்கைகள் இல்லை.

**(உ) இளைஞர் தவறு இழைத்தவர்களின் சீர்திருத்த நிலையம்:-**

16-22 வயதுக்கு இடையிலானோர் நிறுத்தி வைக்கப்படுகின்றார்கள். கைதிகளுக்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடங்கள் இல்லை, சுதந்திர தரப்பினர், விவசாய மற்றும் கால்நடை நிர்வாகத்திற்காக ஈடுபடுத்தப்படுகின்றனர், வெளியில் உள்ளவர்களை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது. புனரமைப்பு / ஆலோசனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளது. ஆகக் குறைந்த பாதுகாப்பு உள்ளது. இதில் நீதிமன்ற நடவடிக்கைகள் இல்லை.

(ஊ) **இளைஞர் தவறு இழைத்தவர்களின் பயிற்சி பாடசாலை :-**

03 வருடங்களுக்கு குறைந்த காலம் உரித்தான 16-22 வயதுக்கு இடையிலான இளைஞர் தவறு இழைத்தவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். நாளாந்த கால அட்டவணை உள்ளது. வெளியில் உள்ளவர்களை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது. கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் புனரமைப்பு / ஆலோசனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளது. ஆகக் குறைந்த பாதுகாப்பு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

(எ) **சிறைக் கூடங்கள்:-**

நீதிமன்றம் சமர்ப்பிக்கும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்ற நிறுவனமாகும். சிரேஷ்ட சிறைக்காவலாளி நிறுவன பொறுப்பு உத்தியோகத்தராகவும், பிரதான சிறைச்சாலை மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. ஒரு சிறைச்சாலையில் பல சிறை மேடைகளை காண முடியும்.

### 2.1.4. திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தலைவராக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் செயற்படுவதுடன் அவரின் கீழ் மேலதிக சிறைச்சாலை ஆணையாளர் ஒருவர் செயற்படுகின்றார். அந்த பதவியின் கீழ் பத்து உப திணைக்களங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. அந்த திணைக்களத்தின் பணிகள் மற்றும் ஸ்தாபித்தலின் பிரகாரம் பல பிரிவுகளின் கீழ் பதவியணியினர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

### 2.1.5. பதவியணியினர் தகவல்கள் (2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு )

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலைமையின் பிரகாரம் பல்வேறு வகைப்படுத்தலின் கீழ் 85 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 7,872 ஆக இருந்ததுடன் அந்த பதவிகளில் நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 6,268 ஆகும். பட்டோலை 01 இல் காண்பிக்கப்படுகின்றது.

## 2.2. கணக்காய்விற்கான அதிகார பலம்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும், 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 2.3. கணக்காய்வு அணுகு முறை



சிறைச்சாலைகளின் இயலளவை மிஞ்சும் வகையில் சிறைச்சாலைகளின் கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் கைதிகளை வைத்திருக்க கூடிய இடவசதிகளின் அளவு குறைந்தமையினால் சிறைச்சாலை இட நெருக்கடி உருவாகியிருந்தது. கடந்த 08

வருடங்களுக்கு அண்மித்த காலப்பகுதிகளுக்கு உரிய தகவல்களை கவனத்தில் கொள்ளும் போது சிறைச்சாலையில் இடம் பெற்ற கைதிகளின் எண்ணிக்கை, சிறைச்சாலைகளின் இயலளவை மிஞ்சியிருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டின் பின்னர் சிறைச்சாலை கட்டிடம் நிர்மாணித்ததன் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது ஏதோ ஒரு அளவில் சிறைச்சாலை கூட்ட நெரிசல் குறைவடைந்திருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது சிறைச்சாலை இட நெருக்கடி முன்னைய காலப்பகுதியினையும் விட அதிகரித்திருந்ததுடன் அது தொடர்ந்தும் அந்த ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த கைதிகளின் எண்ணிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சிறைச்சாலையின் இயலளவை விஞ்சி தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 190 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

எமது நாட்டில் தற்போதைய பொருளாதார நிலைமையின் இடையில் சமூக பொருளாதார பிரச்சினைகளின் காரணமாகவும், போதைப் பொருட்களுக்கு நபர்கள் அடிமையாகியிமையினால் சிறைச்சாலைகளில் இடப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை கனிசமான அளவு உயர்வடைந்திருந்தது. சிறைச்சாலை கூட்ட நெரிசலை குறைப்பதற்காக பொரளையில் அமைந்துள்ள வெலிக்கடை சிறைச்சாலை தொகுதியை கொரண, பில்லேவ பிரதேசத்தில் மீள் அமைக்கும் செயற்திட்டம் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளின் இடையே புதிய நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டமையால் இந்த செயற்திட்டத்தையும் அமுல்ப்படுத்துதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் சிறைச்சாலை கூட்ட நெரிசலில் முன்னரை விட கனிசமான பிரச்சினைகள் சிறைச்சாலை முறைமையில் தற்போது முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறான பின்புலத்தில் அந்த பிரச்சினைகளை கலந்துரையாடுவதன் மூலம் அந்த பிரச்சினைகளுக்கான காரணம், அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்காக பிரச்சினைகளின் அணுகுமுறையின் கீழ் இந்த செயலாற்றல் கணக்காய்வை மேற்கொள்ளல்.

## 2.4. கணக்காய்வின் நோக்கம் மற்றும் அளவுகோல்கள்

இலங்கையின் சிறைச்சாலை முறைமையில் காணப்படுகின்ற இட நெருக்கடி மற்றும் அதற்கான காரணங்களை இனங்காண்பதற்கும் அந்த காரணங்களினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான பரிந்துரைகளை வழங்குதல் இந்த கணக்காய்வின் நோக்கமாகும்.

| | அளவுகோல்கள் | மூலம் |
|---|---|---|
| (அ) | (i.) ஒரு சிறைக் கைதியின் தரித்து வைக்க வேண்டிய சிறைகூடம் 54 சதுர அடிக்கு குறையாத அல்லது 540 கன அடிக்கு குறையாமல் இருத்தல் வேண்டும். (நீளம் 9 அடி x அகலம் 6 அடி x உயரம் 10 அடி) | • 1877 இன் 16 ஆம் இலக்க சிறைச்சாலை கட்டளைச் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட 179 விதி<br>• 2013 பெப்ரவரி 26 திகதிய 11/2013 ஆம் இலக்க சிறைச்சாலை ஆணையாளரின் சுற்றறிக்கை.<br>• ஐக்கிய நாடுகளின் செயற்திட்ட சேவைகளுக்கான அலுவலகம் (United Nations Office For Project Services - UNOPS ) இன் சிறைச்சாலைகளை திட்டமிடுவதற்கான தொழில்நுட்ப வழிகாட்டி (Technical Guidance For |

Prison Planning) குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த நியமம்.

(ii) சகல சிறைக்கூட மண்டபங்களும் (வாட்டு) ஒரு கைதிக்காக காணப்பட வேண்டிய 24 அடி அளவு மற்றும் அந்த கட்டிடத்தில் ஆகக் குறைந்தது உயரம் 10 அடியாக இருக்க வேண்டும். (நீளம் 8 அடி X அகலம் 3 அடி X உயரம் 10 அடி)

- 2013 பெப்ரவரி 26 திகதிய 11/2013 ஆம் இலக்க சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை.

(iii) கைதிகளை வகைப்படுத்துதல்.

- 1877 இன் 16 ஆம் இலக்க சிறைச்சாலை கட்டளைச் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட 178 விதி

(ஆ) 02 வருடங்களுக்கு குறைந்த (கட்டாயம் அல்லாத சிறைத் தண்டனைக்காக நீதி மன்றத்தின் மூலம் சிறைச்சாலர்களுக்கான தண்டனை மற்றும் கைவிடப்பட்ட சிறைச்சாலைகளில் இடப்பட்ட தண்டணை அல்லது தண்டனையை தீர்மானிப்பதற்கு பதிலாக மாற்று தண்டணையாக சமூக அடிப்படையிலான சீர்திருத்த கட்டளையொன்றை விநியோகித்தல் மற்றும் கட்டளைகளை அமுல்ப்படுத்துதல்.

- 1999 இன் 46 ஆம் இலக்க சமூக அடிப்படையிலான சீர்திருத்த சட்டம்.

(இ) அரசாங்க இரசாயன பகுப்பாய்வினால் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மருந்துகள், பொருட்கள், அல்லது தயாரித்தல் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு சமர்பிக்கப்பட்ட திகதியில் இருந்து 12 மாதங்களுக்கு – அவர்களின் பரிசோதனை பெறுபேறு அறிக்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது பொலிஸ் போதைப் பொருள் பணியகத்திற்கு பிரதியுடன் உரிய நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

- 2022 இன் 41 ஆம் இலக்க விச வகை, காபிக் மற்றும் அபாயகரமான ஔடத வகை திருத்தச் சட்டம் (1984 இன் 13 ஆம் இலக்க நச்சு வகை, காபிக் மற்றும் அபாயகர ஔடத வகை சட்டம்)

| | | |
|---|---|---|
| (ஈ) | அபாயகரமான ஔடதங்களுக்காக நபர் ஒருவர் அடிமையாகி இருந்தாரா என்பது தொடர்பாக மருத்துவ அறிக்கையை கோரி உரிய நபரின் நீதிபதிக்கு சமர்ப்பித்தல் நிலைய பொறுப்பு பொலிஸ் உத்தியோகத்தருக்கு கையளித்தல். | • 2007 இன் 54 ஆம் இலக்க மருந்துகளுக்கு அடிமையானவர்களின் (சிகிச்சை மற்றும் புனரமைப்பு தொடர்பான சட்டம்) |
| (உ) | கைதிகளை தற்காலிகமாக வீடுகளில் விடுமுறைக்கு அனுப்பும் முறைமை. | • குற்றங்களை தடுக்கும் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு. |
| (ஊ) | சனாதிபதியினால் கைதிகளுக்காக பொது மன்னிப்பு வழங்குதல். | • அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவு |
| (எ) | கைதிகளுக்கு மானிட கௌரவத்துடன் கவனத்தில் கொள்ளக்கூடிய குற்றங்கள் கிடைக்குமாயின் நியாயமான காலத்தில் வழக்கு விசாரணைகளை முடிவுறுத்துதல். | • ஐக்கிய நாடுகளின் பொது சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட சிறையில் இடப்பட்ட நபர்களைப் பாதுகாப்பதற்கான மூல தத்துவம் (1988 இன் 38 ஆவது மூல தத்துவம்)<br>• மனித உரிமைகள் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட கூற்றின் 11 ஆவது பிரிவு. |
| (ஏ) | சிறைக் கைதிகளின் ஊழியத்தை தனியார் பிரிவில் செயற்திட்டங்களில் ஈடுபடுத்தும் போது உரிய துறையில் 03 மாத காலம் பயிற்சி, தொழில் மட்டத்தில் சான்றிதழ், மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக வெளிநாட்டு மொழி பயிற்சியொன்றை வழங்குதல். | • 2020 மே 14 ஆந் திகதிய 20/0792/207/025 என்ற அமைச்சரவை பத்திரம். |

### 2.5. கணக்காய்வு முறை

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகளை பின்பற்றி இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

(i.) காணப்படுகின்ற சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள், நியமங்கள் தொடர்பான ஆய்வு

(ii.) நேர்முக கலந்துரையாடல் மூலம் தேவையான அனுபவம் மற்றும் தகவல்களைப் பெறல்.

(iii.) சிறைச்சாலை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் செயலாற்றல் மற்றும் புள்ளி விபர அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள எழுத்து மூல தகவல்கள் மற்றும் ஏனைய எழுத்து மூல தகவல்களை கோரல்.

(iv.) பௌதீக பரிசோதனை

(v.) தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தி பத்திரிகைகள் போன்ற ஊடகங்களின் மூலம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற வெளிப்படுத்தல்களை உள்ளடக்கி கவனம் செலுத்த வேண்டிய விடயங்களை இனங்காணல். கடந்த காலங்களில் அவ்வாறான ஊடக வெளிப்படுத்தல்கள் சில தொடர்பான விபரங்கள் காண்பிக்கப்படுகின்றது.

## 2.6. விடயப் பரப்பு மற்றும் விடயப் பரப்பெல்லை.

### 2.6.1. விடயப் பரப்பு

சிறைச்சாலை திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற 04 பாதுகாப்பு சிறைச்சாலைகள், 18 தடுத்து வைத்தல் சிறைச்சாலைகள், இளைஞர் தவறு இழைத்தவரின் 02 சீர்திருத்த நிலையங்கள், 10 வேலை முகாம்கள், 02 திறந்த வேலை முகாம்கள், 23 சிறை மேடைகள் மற்றும் சிறைச்சாலை பாடசாலை, 2022 சனவரி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் தகவல்களின் அடிப்படையில் சிறைச்சாலை இட நெருக்கடி தொடர்பாக பரிசோதனை செய்யப்பட்டது. அதற்கு மேலதிகமாக 02 வருடங்களை விட குறைந்த சிறை தண்டனைக்காக நீதிமன்றத்தின் மூலம் சிறைச்சாலையில் இட்டு இடப்பட்ட தண்டணை, கைவிடப்பட்ட சிறைச்சாலைகளில் தண்டனை, அல்லது தண்டணையொன்று நிர்ணயிப்பதற்கு பதிலாக மாற்று தண்டணையாக சமூக சீர்திருத்த கட்டளை விநியோகிக்கப்பட்ட சீர்திருத்த வாதிகள் தொடர்பான தகவல்கள் இந்த கணக்காய்விற்கு அடிப்படையாக கொள்ளப்பட்டது.

### 2.6.2. விடயப் பரப்பெல்லை.

கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளலில் வரையறை காணப்படுகின்றது.

(i.) சிறைச்சாலை திணைக்களத்திற்கு சொந்தமான ஆரம்ப தரவுகளை பயன்படுத்தி தகவல்களை தயாரித்தல்.

(ii.) கால எல்லையுடன் இருந்த பௌதீக பரிசோதனையின் போது தெரிவு பரிசோதனைக்காக அனுப்புதல்.

(iii.) நீதிமன்றம் போன்ற வெளி நிறுவனங்களின் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாது இருந்தமை.

(iv.) சிறைச்சாலை வளவிலும், கைதிகள் நேரடியாக நுழைந்து கைதிகளின் நேரடி கருத்துக்களை விசாரணை செய்வதன் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை.

(v.) நிழற் படங்களை எடுப்பதன் மூலம் தகவல்களை சேகரிக்கும் போது கணக்காய்வினால் நேரடியாக மேற்கொள்ள முடியாமை.

(vi.) மீண்டும் மீண்டும் சிறைகளுக்கு வருகின்ற கைதிகள் தொடர்பாக முறையான தகவல்களை சேகரித்தல் சிறைச்சாலைகளினால் மேற்கொள்ளப்படாமை.

(vii.) தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது, கவனத்தில் கொள்ளக் கூடிய கால தாமதம் காணப்பட்டமை.

(viii.) முறையாக உறுதிப்படுத்தப்பட்ட சில விடயங்களுக்காக முறையாக உறுதிப்படுத்துவதற்கு உறுதிபடுத்திய சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாது இருந்தமை.

(ix.) காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியின் இடையே கணக்காய்வினால் தேவையான வழங்கல் ஆகக் குறைந்த அளவில் பயன்படுத்துதல்.

(x.) நாளாந்தம் சிறைச்சாலையில் இருக்கின்ற கைதிகளின் எண்ணிக்கையை வெளியிடுவதற்காக எந்த ஒரு ஆண்டில் இருந்தும் கைதிகளின் எண்ணிக்கை மத்திய மயப்படுத்தப்பட்ட கேந்திர அளவிடையாக பயன்படுத்த முடியுமாக இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் நாளாந்த மத்திய பெறுமதி கணிப்பிடப்படாமையினால் 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிறைச்சாலைகளின் கைதிகளின் எண்ணிக்கையை அதற்காக ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளிலும் தகவல்களை ஒப்பீடு செய்து புள்ளிவிபர ரீதியில் பாதுகாப்பதற்காக அந்தந்த ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிறைச்சாலை கைதிகளின் அளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## 3. விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1. சிறைச்சாலைகளின் இயளலவு

சிறைச்சாலைகளின் இயலளவாக கருதப்படுவது தேசிய சட்ட முறைமை அல்லது பிரமாணங்கள் அல்லது ஏனைய வழிகாட்டி ஆவணங்களின் அடிப்படையாக கொண்டு நியமனங்களுக்கு இணங்க ஏதாவது சிறைச்சாலையொன்றில் தங்குமிட வசதிகளை வழங்க கூடிய கைதிகளின் எண்ணிக்கை அளவாகும்.

#### 3.1.1.இட வசதிகளை கொண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள்.

இலங்கையில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்காக வழங்க வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட இடவசதிகளின் அளவை தீர்மானிக்கும் போது பின்வரும் நியமங்களின் நிலைமை கவனத்தில் கொள்ளப்பட்டது.

(அ) 1956 ஆம் ஆண்டின் போது திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்ட சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ஆவது பந்தியின் பிரகாரம் சிறைச்சாலையில் இருக்கின்ற சிறை கூடங்களின் அளவின் பிரகாரம் சகல கைதிக்கும் இரவு நேரத்தின் போது தனியான கூடம் பூட்டு திறப்புடன் மூடி வைக்க வேண்டும். அவ்வாறான ஒரு கைதி தடுத்து வைக்க வேண்டிய சதுர அடி 54 க்கு குறையாத அல்லது கன அடி 540 க்கு குறையாக இருக்க வேண்டிய (நீளம் 9 அடி, அகலம் 6 அடி, உயரம் 10 அடி) ஆக இருக்க வேண்டியது குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) திறைசேரி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை 2013.02.26 ஆம் திகதிய இலக்கம் 11/2013 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் சகல சிறைச்சாலைகளின் மண்டபங்கள் (வார்ட்டு) ஒரு கைதிக்காக காணப்பட வேண்டிய அடி அளவு 24 அடியாக (நீளம் 8 அடி X, அகலம் 3 அடி) மற்றும் அந்த கட்டிடத்தில் ஆகக் குறைந்தது உயரம் 10 அடி ஆக இருத்தல் வேண்டும்.

(இ) இதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகளின் செயற்திட்டத்திற்காக அலுவலகம் (United Nations Office For Project Services - UNOPS ) இன் சிறைச்சாலை திட்டமிடலுக்கான தொழில் நுட்ப வழிகாட்டியின் (Technical Guidance For Prison Planning) குறிப்பிடப்பட்ட பிரகாரம் சிறைக் கூடங்கள் மற்றும் மண்டபங்கள் சிறைக் கைதிக்காக ஆகக் குறைந்த நியமமான நிலத்தை சுற்றி இட வசதிகள் மற்றும் காற்றோட்டம், வெளிச்சம் பெற்றுக்கொள்வதற்காக காணப்பட வேண்டிய இட வசதிகள் போன்று காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சிறைக் கூடத்தில் ஒரு கைதிக்காக 5.4 சதுர மீற்றரும் ஒருவருக்கு மேற்பட்டு வாய்க்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கைத்திக்கா 3.4 சதுர மீற்றர் இட வசதிகளும் காணப்பட வேண்டியமை குறிப்பிடப்படுவதுடன் சிறை வார்ட்டுக்களில் இல்லையாயின் மண்டபம் ஒன்றில் ஒருவருக்காக தனி கட்டிலுடன் 3.4 சதுர மீற்றரும், 02 தட்டு கட்டிலுடன் உள்ள ஒருவருக்காக 2.6 சதுர மீற்றர் இட வசதியும் 03 தட்டு கட்டிலுடன் ஒருவருக்காக 2.3 சதுர மீற்றரும் காணப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டுள்ளது.

#### 3.1.2. சிறைச்சாலையில் காணப்படுகின்ற கூட்ட நெரிசல்

சிறைச்சாலை இயலளவை விஞ்சுகின்ற வகையில் சிறைச்சாலையில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக கைதிகளை வைக்க கூடிய இடவசதிகளின் அளவு குறைந்தமையினால் சிறைச்சாலைகளின் கூட்ட நெரிசல் உருவாகியிருந்ததுடன்

அது தொடர்பாக உரிய அவதானிப்புக்கள் எதிர் வரும் பந்திகளில் காண்பிக்கப்படுகின்றது.

### 3.1.3. சிறைச்சாலை கூட்ட நெரிசல் தொடர்பான ஒட்டு மொத்த நிலைமை

இது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) 2015 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கடந்த 07 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான தகவல்களை கவனத்தில் கொள்ளும் போது இலங்கையில் ஒட்டு மொத்த சிறைச்சாலை முறைமையிலும் சிறைச்சாலைகளில் இடப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை, சிறைச்சாலைகளின் இயலளவை போன்று 139 சதவீதம் முதல் 232 சதவீதத்திற்கு இடையிலான வீச்சினைக் கொண்டு இருந்தது. இந்த சதவீதம் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை 149 சதவீதம் முதல் 213 சதவீதம் வரை உயர்வடைந்திருந்தது. 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அது 139 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கு காரணமாக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் சிறைச்சாலையின் இயலளவு 11,762 முதல் 13,241 வரை அதாவது 12.5 சதவீதத்தினால் அதிகரித்தமையாகும். சிறைச்சாலையின் இயலளவை போன்று இவ்வாறு அதிகரித்த போதிலும் சிறைச்சாலைக்கு வருகின்ற கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையால் தற்போது இது 232 சதவீதம் வரை உயர்வடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிறைச்சாலை இயலளவை விஞ்சி சிறைச்சாலை முறைமையில் நிறுத்தி வைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 14,885 ஆகும்.

**2015 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் சிறைச்சாலைகளின் இயலளவை விஞ்சி தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை.**

| ஆண்டு (திசெம்பர் 31 வரையில்) | சிறைச்சாலை இயலளவு (கைதிகளின் எண்ணிக்கை) | சிறைச்சாலைகளில் தங்கியிருக்கின்ற கைதிகளின் எண்ணிக்கை | சிறைச்சாலைகளின் இயலளவை விஞ்சி தங்கியிருக்கின்ற கைதிகளின் எண்ணிக்கை | தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை சிறைச்சாலை இயலளவின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| --------------- | --------------- | --------------- | --------------- | --------------- |
| 2015 திசெம்பர் 31 | 11,762 | 17,212 | 5,450 | 146 |
| 2016 திசெம்பர் 31 | 11,762 | 17,482 | 5,720 | 149 |
| 2017 திசெம்பர் 31 | 11,762 | 19,712 | 7,950 | 168 |
| 2018 திசெம்பர் 31 | 11,762 | 23,364 | 11,602 | 199 |
| 2019 திசெம்பர் 31 | 11,762 | 25,108 | 13,346 | 213 |
| 2020 திசெம்பர் 31 | 13,241 | 19,399 | 6,158 | 147 |
| 2021 திசெம்பர் 31 | 13,241 | 18,373 | 5,132 | 139 |
| 2022 திசெம்பர் 31 | 11,291 | 26,176 | 14,885 | 232 |

*(மூலம் :- சிறைச்சாலை திணைக்களத்தின் புள்ளி விபர பிரிவு)*

**2015 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் சிறைச்சாலை இயலளவை விஞ்சி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை**




(ஆ) இலங்கையின் சிறைச்சாலைகளில் ஆகக் குறைந்த நியமனங்களின் பிரகாரம் தரித்து வைப்பதற்காக கைதிகளுக்காக போதியளவான இட வசதிகள் காணப்படாமையினால் சிறைச்சாலைகளில் அதிக கூட்ட நெரிசல் காணப்படுகின்றமையை உறுதிப்படுத்துகின்ற விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவு பௌதீக பரிசோதனையின் போது சிறைச்சாலைகளில் அதிக கூட்ட நெரிசல் அவதானிக்கப்பட்டதுடன் அந்த பௌதீக பரிசோதனையின் போது கொழும்பு தடுத்து வைத்தல் சிறைச்சாலையின் E மற்றும் H வார்ட்டுக்களில் மற்றும் மகர சிறைச்சாலைகளில் P வார்ட்டின் கைதிகளின் கூட்ட நெரிசல் பின்வரும் நிழற் படங்களினால் நிரூபனமாகின்றது.



**கொழும்பு தடுத்து வைத்தல் சிறைச்சாலை**
**2023.01.25 ஆந்**
**E வாட்**



**கொழும்பு தடுத்து வைத்தல் சிறைச்சாலை**
**2023.01.25 ஆந் H வாட்**



**மகர சிறைச்சாலை**
**2022.12.12 ஆந்**
**P வாட்**



**மகர சிறைச்சாலை**
**2022.12.12 ஆந்**
**P வாட்**

3.1.4. **2022 ஆம் ஆண்டில் கைதிகள் அசாதாரணமாக அதிகரித்தமை.**

மேலும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டின் சிறைச்சாலை இயலளவை விஞ்சி தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் 12 மாதங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சராசரி மாதாந்த கைதிகளின் எண்ணிக்கை 22,097 ஆக இருந்ததுடன் அது 2021 ஆம் ஆண்டில் சராசரி மாதாந்த கைதிகளின் எண்ணிக்கையானது 19,295 உடன் ஒப்பிடும் போது 15 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்தின் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்த அளவு**

| மாதம் | 2021 ஆம் ஆண்டு | | | 2022 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| ------------ | கைதிகளின் எண்ணிக்கை | சந்தேக நபர்களின் எண்ணிக்கை | கூட்டு மொத்தம் | கைதிகளின் எண்ணிக்கை | சந்தேக நபர்களின் எண்ணிக்கை | கூட்டு மொத்தம் |
| சனவரி | 6,612 | 11,894 | 18,506 | 7,512 | 11,360 | 18,872 |
| பெப்ரவரி | 6,661 | 11,835 | 18,496 | 7,666 | 11,866 | 19,532 |
| மார்ச் | 7,369 | 11,884 | 19,253 | 8,134 | 12,122 | 20,256 |
| ஏப்ரல் | 7,474 | 12,916 | 20,390 | 8,037 | 11,637 | 19,674 |
| மே | 6,813 | 12,481 | 19,294 | 7,485 | 12,148 | 19,633 |
| யூன் | 6,496 | 12,511 | 19,007 | 7,603 | 12,194 | 19,797 |
| யூலை | 6,882 | 13,141 | 20,023 | 7,789 | 12,796 | 20,585 |
| ஆகஸ்ட் | 6,786 | 12,923 | 19,709 | 8,506 | 14,870 | 23.376 |
| செப்தெம்பர் | 6,821 | 12,938 | 19,759 | 9,002 | 15,651 | 24,653 |
| ஒக்டோபர் | 7,160 | 12,585 | 19,745 | 9,405 | 16,590 | 25,995 |
| நவம்பர் | 7,201 | 11,788 | 18,989 | 10,155 | 16,459 | 26,614 |
| திசெம்பர் | 7,356 | 11,017 | 18,373 | 9,449 | 16,727 | 26,176 |

(மூலம் - சிறைச்சாலை திணைக்களத்தின் புள்ளி விபர பிரிவு)

**2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்திலும் சிறைச்சாலையில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை.**

அதன் பிரகாரம் சிறைச்சாலையில் காணப்படுகின்ற இட வசதிகளின் அளவு



போதியளவு இல்லாத நிலைமையில் இவ்வாறு அசாதாரணமாக கைதிகள் அதிகரித்தமையினால் அதனை முகாமைத்துவம் செய்வதிலும் இடையூறாக இருந்தது.

### 3.1.5. சிறைச்சாலை நிறுவனங்களின் இயலளவை விஞ்சி கைதிகள் நிறுத்தி வைக்கப்பட்டமை.

சிறைச்சாலை முறைமையில் ஒவ்வொரு சிறைச்சாலை நிறுவனங்களிலும் சிறைச்சாலை இயலளவை விஞ்சி கைதிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஒவ்வொரு சிறைச்சாலைகளிலும் 27 நிறுவனங்களின் ஒப்பீட்டு ரீதியான புள்ளிவிபர தகவல்களின் பிரகாரம் இயலளவை விஞ்சி கைதிகளின் எண்ணிக்கை 14,124 ஆக இருந்ததுடன், அது 62 சதவீதம் முதல் 1,907 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

| சிறைச்சாலை நிறுவனம் | சிறைச்சாலைகளின் இயலளவு | தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை. | இயலளவை விஞ்சி தடுத்து வைக்கப்பட்ட கைத்திகளின் எண்ணிக்கை. |
|---|---:|---:|---:|
| வெலிமட | 1,422 | 2,490 | 1,068 |
| கொ.றி.ப | 423 | 1,676 | 1,253 |
| மெகசீன் | 493 | 1,282 | 789 |
| மகர | 1,000 | 2,907 | 1,907 |
| போஹம்பற | 1,006 | 1,884 | 878 |
| அங்குணுகொல பெலஸ்ஸ | 952 | 1,557 | 605 |
| அநுராதபுரம் | 830 | 902 | 72 |
| திருகோணமலை | 121 | 330 | 209 |
| களுத்துறை | 559 | 1,328 | 769 |
| குருவிட்ட | 624 | 753 | 129 |
| மட்டக்களப்பு | 197 | 621 | 424 |
| பதுளை | 157 | 356 | 199 |
| காலி | 120 | 998 | 878 |
| மாத்தறை | 146 | 488 | 342 |
| நீர்கொழும்பு | 761 | 1,832 | 1,071 |
| வவுனியா | 54 | 336 | 282 |
| கேகாலை | 149 | 705 | 556 |
| அம்பேபுஸ்ஸ | 70 | 153 | 83 |
| வாரியபொல | 182 | 912 | 730 |
| யாழ்ப்பாணம் | 336 | 714 | 378 |
| பொலன்னறுவை | 252 | 314 | 62 |
| மொனராகலை | 114 | 219 | 105 |
| பல்லேஹகல | 287 | 852 | 565 |
| ஹோமாகம | 108 | 248 | 140 |
| வீரவில | 278 | 476 | 198 |
| பல்லன்சேன | 170 | 357 | 187 |
| தல்தென | 155 | 400 | 245 |
| | | | 14,124 |

(மூலம் - சிறைச்சாலை திணைக்களத்தின் புள்ளி விபர பிரிவு)

### 3.1.6. கைதிகளுக்கு தேவையான போதியளவான இடவசதி காணப்படாமை.

ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் காணப்படுகின்ற சட்ட நிலைமைகளுக்கு இணங்கும் வகையில் கைதிகளின் உள ரீதியான மற்றும் உடல் ரீதியான அறுகதைக்கு ஈடு கொடுக்கும் வகையில் இட வசதிகளுடன் கைதிகளுக்காக தங்குடமிட வசதிகளை வழங்குதல். சிறைச்சாலை கூட்ட நெருக்கடியினால் வசதியீனமாகியிருந்தது. 2022 யூலை 01 இல் உள்ளவாறு நீர்கொழும்பு மற்றும் வவுனியா சிறைக் கூடம் மற்றும் வாட்டுக்களில் பெண் கைதிகளுக்காக குறைவான இட வசதி அளவு சதுர அடி முறையே 240 மற்றும் 141 ஆக இருந்தது. அதற்கு மேலதிகமாக 14 சிறைச்சாலைகளில் ஆண் கைதிகளுக்காக சதுர அடி 108,689 குறைவான இட வசதி காணப்பட்டமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

**2022 யூலை 01 இல் உள்ளவாறு சிறைச்சாலைகள் முறைமைகள் ஆண் கைதிகளின் குறைவான இட வசதி அளவு**

| தொடர் இலக்கம் | சிறைச்சாலை நிறுவனம் | தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை | காணப்பட வேண்டிய இட வசதிகளின் அளவு (சதுர அடி) | காணப்படுகின்ற இட வசதிகளின் அளவு (சதுர அடி | பற்றாக்குறை இட தேவைகள் (சதுர அடி) |
|---|---|---|---|---|---|
| 1. | வெலிக்கடை | 2,103 | 103,948 | 76,540 | 27,408 |
| 2. | புதிய மெகசீன் | 844 | 21,891 | 19,203 | 2,688 |
| 3. | போஹம்பற | 1,334 | 32,466 | 21,853 | 12,463 |
| 4. | அநுமராதபுரம் | 738 | 23,517 | 11,799 | 11,718 |
| 5. | நீர்கொழும்பு | 1,383 | 33,549 | 18,645 | 14,904 |
| 6. | காலி | 611 | 10,998 | 9,459 | 1,539 |
| 7. | மாத்தறை | 372 | 6,696 | 6,243 | 378 |
| 8. | மட்டக்களப்பு | 475 | 11,400 | 7,665 | 3,744 |
| 9. | கேகாலை | 628 | 15,072 | 5,621 | 9,451 |
| 10. | திருகோணமலை | 226 | 5,424 | 4,368 | 1,056 |
| 11. | யாழ்ப்பாணம் | 545 | 11,649 | 8,049 | 3,600 |
| 12. | பொலன்னறுவை | 706 | 18,604 | 4,672 | 14,012 |
| 13. | வவுனியா | 257 | 5,784 | 1,640 | 4,144 |
| 14. | அம்பேபுஸ்ஸ | 171 | 4,104 | 2,520 | 1,584 |
| | | | | | 108,689 |

(மூலம் - மேற்கூறப்பட்ட அட்டவணையில் கூறப்பட்ட ஒவ்வொரு சிறைச்சாலை நிறுவனங்களிலும் இருந்து பெறப்பட்ட தகவல்கள்)

### 3.1.7. சுகாதார வசதிகள் போதியளவில் இல்லாமை.

சிறைச்சாலை இயலளவை விஞ்சி கைதிகளின் அளவு அதிகரித்தமையால் கைதிகளுக்கு போதியளவு பிரகாரம் சுகாதார வசதிகளை வழங்குதல் கஷ்டமாகியிருந்தது. 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் 27 சிறைச்சாலைகளில் 187 மலசல கூடங்களில் பற்றாக்குறை காணப்பட்டதுடன் தற்போது காணப்படுகின்ற மலசல

கூடங்களிலும் 287 பழுது பார்க்க வேண்டிய நிலைமைகளில் காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சிறைச்சாலை | பழுது பார்க்க வேண்டிய மலசல கூடங்களின் எண்ணிக்கை | மேலும் தேவையான மலசல கூடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| ------------------------ | --------------------- | --------------------------- |
| தளுபத்த | 03 | 0 |
| மட்டக்களப்பு | 10 | 0 |
| குருவிட்ட | 02 | 10 |
| கேகாலை | 06 | 04 |
| காலி | 03 | 15 |
| களுத்துறை | 18 | 02 |
| கொழும்பு றிமான்ட் | 27 | 11 |
| புதிய மெகசீன் | 21 | 05 |
| வெலிக்கடை | 15 | 03 |
| வவுனியா | 0 | 06 |
| யாழ்ப்பாணம் | 06 | 09 |
| அநுராதபுரம் | 26 | 02 |
| அம்பேபுஸ்ஸ | 01 | 0 |
| அங்குணகொலபெலஸ்ஸ | 70 | 0 |
| நீர்கொழும்பு | 04 | 02 |
| மகர | 0 | 51 |
| பல்லேகல | 08 | 48 |
| போகம்பற | 19 | 08 |
| வாரியபொல | 05 | 0 |
| மாத்தறை | 06 | 2 |
| திருகோணமலை | 03 | 01 |
| மொனராகலை | 04 | 0 |
| பதுளை | 04 | 0 |
| வீரவில | 07 | 0 |
| வட்டறெக | 04 | 0 |
| தல்தென | 02 | 03 |
| | 04 | 05 |
| | 278 | 187 |

(மூலம் : மேற் கூறப்பட்ட அட்டவணையில் (குறிப்பிடப்பட்ட அந்தந்த சிறைச்சாலை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்.)

### 3.2. சிறைச்சாலை கூட்ட நெருக்கடி ஏற்படுவதற்கான காரணம்

சிறைச்சாலை கூட்ட நெருக்கடி ஏற்படுவதற்கான காரணத்துறைகள் இரண்டின் கீழ் இனங்காண முடியும்.

### 3.2.1. பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் சட்டரீதியான சூழலின் தாக்கங்கள்

நாட்டின் பொருளாதாரம், சமூக, அரசியல் மற்றும் சட்டரீதியான சுற்றாடலின் மூலம் தோன்றுகின்ற பிரச்சினைகளின் காரணமாக குற்றச் செயற்பாடுகள் அதிகரித்தமை நேரடி விளைவாக சிறையிடப்படுதல் உயர்ந்து சென்றமையால் சிறைச்சாலைகளில் கூட்ட நெருக்கடி ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. அதாவது வறுமையில் வாடுகின்ற கற்ற அல்லது வரையறையான கல்வி பெற்ற, வேலையற்ற, மற்றும் வீடு அற்ற சமூகப் பகுதிகளின் அவர்களின் குடும்பங்களில் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தமை, போதைப் பொருள் மற்றும் முறையற்ற மதுபான பாவனை பொருளாதார சமூக சூழலில் ஏற்படுகின்ற செயற்பாடுகளில் இருந்து அழிவடையக் கூடிய நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தமையால் சமூகத்தின் நபர்களின் தவறு செய்வதற்கு ஏற்பட்டதன் மூலம் குற்ற செயற்பாடுகள் அதிகரித்திருந்தன. தீர்வினை பெற்றுக் கொள்வதற்கு தடையாக மற்றும் தாமதமாக அதாவது சகலருக்கும் உடையதாக சமமான நுழைவு ஒன்றுடன் உறுதிப்படுத்துதல் மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்வதன் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த பொறுப்புக்கள் மற்றும் நியமங்களை வழங்க முடியாது இருந்த நிலைமை மற்றும் முறையற்றதாக கைது செய்தல், வழக்கு விசாரணைக்கு முன் நீண்ட காலம் தடுத்து வைக்க காரணமாக இருந்தது. தண்டனை ஒன்றை தீர்மானிப்பதற்கு நீதிமன்ற செயற்பாடுகளில் தாமதம் கவனத்தில் கொள்ளக் கூடிய தாக்கமளித்திருந்ததுடன் அதன் மூலம் தடுத்து வைத்தல் காலம் சில மாதங்கள் அல்லது சில வருடங்கள் வரை நீடிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு முன்னைய வழக்கு விசாரணைகளுக்காக தடுத்து வைத்தல் பொறுப்பில் மற்றும் அல்லது ஏனைய முறையில் தடுத்து சிறைகளில் தடுத்து வைப்பதற்கு உட்பட்ட அளவு அதிகரித்த காலம் தடுத்து வைத்தல் பொறுப்பில் காணப்பட்டமையும் சிறைச்சாலைகளில் கூட்ட நெருக்கடி ஏற்படுவதற்கு தாக்கமளித்திருந்தது.

### 3.2.2. போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பாக சிறையிலிடல் அதிகரித்து சென்றமை.

போதைப் பொருள் குற்றம் அதிகரித்து நாட்டில் ஏனைய குற்றச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு நேரடியாக தாக்கமளிக்கின்றது. மேலும், போதைப் பொருள் தவறு இழைத்தவர்களில் அனேகமானவாகள் போதைப் பொருள் பயன்பாடு, போதைப் பொருள் வைத்திருத்தல், கொள்வனவு செய்தல் விற்பனை செய்தல் தொடர்பாக சிறைச்சாலைகளில் இடப்படுகின்றனர். அதன் பிரகாரம் இலங்கையில் சிறைச்சாலைகளில் இடப்பட்ட கைதிகளில் கனிசமான அளவு போதைப்பொருளுக்கான குற்றங்கள் தொடர்பாக இருந்தமை ஆகும். இலங்கையில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 26,176 ஆக இருந்ததுடன் அதில் 53 சதவீதத்திற்கு மேற்பட்ட தரப்பினர் அதாவது 13,794 பேர் போதைப் பொருள் குற்றங்கள் மற்றும் தொடர்புடையதான கைதிகள் ஆகும். போதைப் பொருள் குற்றம் தொடர்பாக 4,406 கைதிகளுக்கு சிறைக் கைதிகளாக இருந்ததுடன், 9,388 பேர் சந்தேகத்திற்குரியவர்களாகும்.

போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பாக சிறையில் இடப்படுகின்ற கைதிகள் நீண்ட காலம் சிறைச்சாலைகளில் இடப்படுவதற்கான காரணமாக,

(i.) போதைப்பொருள் சட்டத்தின் கீழ் மிகவும் குறைந்த வடிவில் குற்றங்கள் ஆக இருந்த போதிலும் சிறையில் இடல் மேற்கொள்ளப்படுகின்றமை.

(ii.) சிறையில் இடுவதற்கு பதிலாக மாற்று குற்றங்களை வழங்கும் சந்தர்ப்பங்கள் காணப்படாமை அல்லது வரையறையாக காணப்பட்டமை.

(iii.) குற்றத்தின் தன்மை சிறிய அல்லது பாரியளவானதா என கவனத்தில் கொள்ளாமல் போதைப் பொருள் குற்றம் தொடர்பான வழக்கு

விசாரனைகள் முடிவடையும் வரை தடுத்து வைத்தல் சிறைச்சாலைகளில் இடப்படுகின்றன.

(iv.) போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பான தண்டனை, மனித கொலைகள், அல்லது பெண் துஷ்பிரயோகம் போன்ற மோசமான மற்றும் கடுமையான குற்றங்களுக்கான தண்டணைகள் நீண்ட காலம் கடக்கின்றமை.

(v.) போதைப் பொருள் குற்றம் தொடர்பாக கைதிகள் மன்னிப்புக்கு வழங்கும் இயலுமை காணப்படாமை.

**3.2.3. சட்டத்தை அமுல்ப்படுத்துதல் மற்றும் சிறைச்சாலைகளில் இடல் தொடர்பான நிருவாக செயற்பாடுகளின் குறைபாடுகள்.**

குற்றச் செயற்பாடுகள் அதிகரித்தமையால் நேரடி விளைவாக சிறைச்சாலைகளில் இடல் உயர்வடைந்து சென்றமை, சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசல் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த போதிலும் அதற்கு மேலதிகமாக குற்றம் இழைத்தவர்களுக்கு சட்டத்தை அமுல்ப்படுத்துதல் மற்றும் சிறைச்சாலைகளில் இடல் தொடர்பான நிர்வாக செயற்பாடுகளின் குறைபாடுகள் சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசல் உருவாகுவதற்கு காரணமாக இருந்தன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) பிணை தீர்மானிக்கப்பட்ட எனினும் பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்யாது இருந்தமையின் காரணமாக சந்தேகத்திற்குரியவர்கள் சிறைச்சாலைகளில் இடல்.

கௌரவ நீதிமன்றத்தின் மூலம் சிறைச்சாலைகளுக்கு கொண்டு வரப்படுகின்ற கைதிகளுக்காக பிணை நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய கைதிகளுக்கு பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமையின் காரணமாக சிறைச்சாலைகளில் இடப்பட்டமை.

உதாரணம் :-

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிணை தீர்மாணிக்கப்பட்ட எனினும் பிணை வைப்பதற்கு முடியாத 1,795 கைதிகள் சிறைச்சாலைகளில் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **சிறைச்சாலைகள் இடப்பட்ட காலம்** | **சிறைக் கைதிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 03 மாதங்களுக்கு குறைவு | 855 |
| 03 மாதங்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடையில் | 530 |
| 06 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்கும் இடையில | 268 |
| 12 மாதங்களுக்கு மேல் | 142 |
| **கூட்டு மொத்தம்** | **1,795** |

(மூலம் - சிறைச்சாலை திணைக்களத்தின் செயற்பாடுகள் பிரிவு)

(ஆ) இரசாயன பகுப்பாய்வு அறிக்கை நீதி மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் சந்தேக நபர்கள் நீண்ட காலம் சிறைச்சாலைகளில் இடப்பட்டமை.

1984 இன் 13 ஆம் இலக்க நச்சுவகை, காபிக் மற்றும் அபாயகர ஔடத வகை (திருத்த) 1929 இன் 17 ஆம் இலக்க நச்சு வகை, அபின் மற்றும் அபாயகர ஔடத வகை கட்டளைச் சட்டத்தின் 54 ஆவது பிரிவின் கீழ் (இந்த பிரிவு 2022 இன் 41 ஆம் இலக்க நச்சுவகை, அபின் மற்றும் அபாயகர ஔடத வகை (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது) நீதிமன்றத்தின் மூலம் சிறைச்சாலைகளில் இடம் பெற்றுள்ள சந்தேக நபர்களுக்குரிய பொலிஸினால் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதைப்பொருள் பாவனைகளுக்கு உரிய பகுப்பாய்வு அறிக்கை 12 மாதங்கள் விஞ்சாத காலத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் இந்த இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இது வரை சமர்ப்பிக்காமையினால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தடுத்து வைத்தல் சிறைச்சாலைகளில் உள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை 5,676 ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **சிறைச்சாலைகளில் இருக்கின்ற காலம்** | **கைதிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 03 மாதங்களுக்கு குறைவு | 2,400 |
| 03 மாதங்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடையில் | 2,223 |
| 06 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்கும் இடையில | 835 |
| 12 மாதங்களுக்கு மேல் | 218 |
| **கூட்டு மொத்தம்** | **5,676** |

(மூலம் - சிறைச்சாலை திணைக்களத்தின் செயற்பாடுகள் பிரிவு)

(இ) சமூக சீர்திருத்த கட்டளைகளை வழங்குதல் தொடர்பாக பொது மக்கள் போதியளவான பிரகாரம் அறிந்திராமையினால் மொத்த சிறிய தண்டப் பணத்தையும் செலுத்த முடியாமல் இருந்த நபர்கள் சிறையில் இடப்பட்டமை.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i.) 1999 இன் 46 ஆம் இலக்க சமூக அடிப்படையிலான சீர்திருத்த சட்டத்தின் பிரகாரம் 02 வருடங்களை விட குறைவான (கட்டாயம் அல்லாத) சிறை தண்டனை நீதிமன்றத்தின் மூலம் சிறையில் இடும் தண்டனை, அல்லது தண்டணையை நிர்ணயிப்பதற்குப் பதிலாக மாற்று தண்டணையாக சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளை ஒன்றை விநியோகித்திருந்ததுடன் அந்த கட்டளையை அமுல்ப்படுத்தும் முகமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவனம் கைவிடப்பட்ட சிறை சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களம் ஆகும்.

(ii.) இந்த செயற்பாடுகளின் போது நீதிமன்றத்தால் குற்றம்அ இழைத்தவர் என ஒருவரை சீர்படுத்துவதற்காக சமுதாயம் சார் சீர்திருத்த உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்படுகின்ற முன் தண்டனை அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிபந்தனையின் அடிப்படையில் குற்றம் இழைத்தவரின் உளவியல் சமூக பிரச்சினைகள் ஆபத்தான நிலை மற்றும் தேவையினை கவனத்தில் கொண்டு காணப்படுகின்ற வளங்களினை இனங்கண்டு நபருக்கு கவர்ச்சிகரமான, பொருத்தமான முன் நிற்கும் செயற்பாடுகள் அந்த நபரை சமூகத்தில் வைத்து சீர்திருத்துவதற்காக வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், இந்த செயற்பாடுகள் தொடர்பாக பொது மக்களுக்கு போதியளவான அறிவு காணப்படாமையினால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சிறிய தண்டப் பணம் செலுத்துவதற்கு முடியாதிருந்த சிறை தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை 1,385 பேர்கள் ஆகும். இந்த குற்றம் இழைத்தவர்களை சிறையில் இட்ட காலத்தில் பராமரிப்பதற்காக அவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய தண்டப் பணத்தை விட மேலதிக செலவினம் ஒன்று அரசாங்கத்தினால் செய்யப்பட்டிருந்தது.

| **சிறைச்சாலையில் இருந்த காலம்** | **கைதிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 03 மாதங்களுக்கு குறைவு | 643 |
| 03 மாதங்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடையில் | 371 |
| 06 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்கும் இடையில் | 289 |
| 12 மாதங்களுக்கு மேல் | 82 |
| **கூட்டு மொத்தம்** | **1,385** |

(மூலம் - சிறைச்சாலை திணைக்களத்தின் செயற்பாடுகள் திணைக்களம்)

(ஈ) கைதிகளின் முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு எடுக்கின்ற காலம்

கைதிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நீதிமன்ற செயற்பாடுகளின் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் விசாரனை நடாத்தப்படாமை, தாமதமாயின் விசாரனைக்கு எடுத்தல் மற்றும் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அது பொதுவான நிருவாகத்திற்கு புறம்பான விடயமாக இருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறைப்பாடு சமர்ப்பிப்பதற்கு இறுதி தீர்மானம் பெற்றுக்கொள்வதற்கு இருந்த சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை 301 ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சிறைச்சாலையில் இருந்த காலம் | கைதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 03 மாதங்களுக்கு குறைவு | 22 |
| 03 மாதங்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடையில் | 19 |
| 06 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்கும் இடையில் | 27 |
| 12 மாதங்களுக்கு மேல் | 233 |
| **கூட்டு மொத்தம்** | **301** |

(மூலம் - சிறைச்சாலை திணைக்களத்தின் செயற்பாடுகள் பிரிவு)

(உ) சிறை வாட்டுக்கள், சிறைக் கூடங்கள் மற்றும் சிறைக் கூடங்கள் மற்றும் கட்டிடங்கள் உடைந்து காணப்பட்டமை.

கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் அதற்கு ஒப்பீடாக சிறை வார்ட்டுக்கள், சிறைக் கூடங்கள், சிறை மேடைகளுடன் கட்டிடங்கள் நிர்வகிக்கப்படாமை மற்றும் உடைந்த நிலையில் காணப்படுகின்ற சிறைச்சாலைகளை பழுது பார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையினை காணக்கூடியதாக இருந்தது. கணக்காய்வினால் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது பழுது பார்க்க கூடிய காணப்படுகின்ற கட்டிடங்களின் விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக வெலிக்கடை சிறைச்சாலையில் D மற்றும் செப்பல் வார்ட்டு கட்டிடமும் உடைந்த நிலையில் காணப்பட்டது.

| சிறைச்சாலை நிறுவனம் | கணக்காய்வில் பரீட்சிக்கப்பட்ட திகதி | பழுதுபார்க்க வேண்டிய கட்டிடங்கள் |
|---|---|---|
| அநுராதபுரம் | 2022 திசெம்பர் 14 | • அநுராதபுர சிறைச்சாலையில் பெண்கள் பிரிவில் A சிறை வார்ட்டு<br>• அநுராதபுரம் சிறைச்சாலையில் முதியோர்கள் தடுத்து வைக்கப்படுகின்ற வார்ட்டு |
| களுத்துறை | 2022 ஆகஸ்ட் 02 ஆம் திகதி | C1, C2 , C3, C4 வார்ட்டு தொகுதி |

(ஊ) சிறைச்சாலைகளில் ஏற்படுகின்ற வெளி பிரச்சினைகளினால் கைதிகளை தடுத்து வைப்பதற்கு தங்குமிட கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அழிவடைந்தமை.

2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 02 சிறைச்சாலை நிறுவனங்களில் ஏற்பட்ட கலவரங்களின் காரணமாக சிறைச்சாலை கட்டிடங்களில் சில அழிவடைந்திருந்தன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சிறைச்சாலை நிறுவனம் | கலவரம் ஏற்பட்ட திகதி |
|---|---|
| மகர | 2020 நவம்பர் 29 மற்றும் 30 |
| அநுராதபுரம் | 2011 சனவரி 24, 25 மற்றும் மார்ச் 21 |

(மூலம் - சிறைச்சாலை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 ஆம் ஆண்டு)

(ஊ) வழக்கு விசாரணைக்கு முன்னர் சந்தேக நபர்கள் நீண்ட காலம் பாதுகாப்பான சிறைச்சாலைகளில் இடுதல். சிறைச்சாலை கூட்ட நெரிசல் ஏற்படுவதற்கு இன்னுமொரு காரணமாக இருந்தது.

கைதிகளில் அதிக தரப்பினர் சந்தேகத்திற்கு உரியவர்களாக இருந்ததுடன் அந்த கைதிகள் ஒவ்வொரு தடவையும் நிரவராதிகள் என தீர்மானிக்கப்படுவதன் கீழ் ஆகும். அதாவது மனித உரிமைகள் தொடர்பான கூற்றின் 11 ஆவது பிரிவின் படி அவர்கள் குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் வரை குற்றவாளிகளாக கருதப்படுகின்றன. தற்போது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 1988 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட கைதிகளுக்கான மனித மானிட கௌரவத்தை கவனத்தில் கொள்வதற்கான பின்பற்ற வேண்டிய 38 ஆவது மூல தர்மத்தின் பிரகாரம் குற்றவியல் குற்றங்களை புரிந்த சாதாரணமான நியாயமான காலத்தில் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டியமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இலங்கையில் கைதிகளாக இருக்கின்ற சந்தேக நபர்களாக இருக்கின்ற சிறைச்சாலையில் இடப்பட்ட கைதிகள் தொடர்பாக நீதிமன்ற செயற்பாடுகளின் காரணமாக சந்தேக கைதிகள் ஆக நீண்ட காலம் சிறைச்சாலையில் இருக்க வேண்டி ஏற்பட்டது.

